RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 173 | ஜூன்.28 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



■ சிவகங்கை மாவட்ட ஆட்சியராக பொற்கொடி நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். மாலைதந்தி நாளிதழின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்

## கூட்டணி ஆட்சி குறித்து அமித்ஷா எடப்பாடி பழனிசாமி பேசித் தீர்ப்பார்கள்: நயினார் நாகேந்திரன்

திருநெல்வேலி: ஜூன்.28-

"திமுகவுக்கு தேர்தல் பயம், தோல்வி பயம் வந்துவிட்டது. அதனால் ஏதேதோ பேசுகிறார்கள். கூட்டணி ஆட்சி குறித்து அமித்ஷாவும் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியும் பேசித் தீர்ப்பார்கள், " என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.



இதுதொடர்பாக திருநெல்வேலியில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது: திமுக அரசு நடத்தியது உண்மையான முருகன் மாநாடு கிடையாது. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள், கடவுளை கல்லாக நினைத்து தூக்கிப்போட்டு உடைப்பவர்கள், மற்ற மதங்களை இழிவாகப் பேசுபவர்கள், முருகன் மாநாடு நடத்தினால் முருகன் எப்படி அவர்கள் பக்கம் போவார்.

இந்து முன்னணி நடத்தியது தான் முழுக்க முழுக்க முருக பக்தர்கள் மாநாடு. இந்து முன்னணி நடத்திய அந்த மாநாட்டில் நாங்கள் கலந்து கொண்டோம். இந்த மாநாட்டில் யாரையும் நாங்கள் குறை சொல்லவில்லை. பிற மதங்களையோ, பிறரைப் பற்றியோ புண்படுத்தி பேசவில்லை. எங்களுக்கு ஓட்டு போடுங்கள் என்று கேட்கவில்லை.

இதை தேர்தலுக்கான வாக்கு வங்கியாக மாற்றவோ நாங்கள் முயற்சிக்கவில்லை. திருச்செந்தூரில் நடைபெறும் கும்பாபிஷேகம் அனைத்து பக்தர்களுக்கும் பொதுவானது. அதை வைத்து திமுக பலனடைய முயற்சிக்கிறது. முதல்வர் ஸ்டாலினின் குடும்ப ஆட்சியை மக்கள் நிச்சயமாக திரும்ப அமைக்க விடமாட்டார்கள். குறிப்பாக அடுத்த தலைமுறையினர் விரும்பவில்லை.

திமுகவுக்கு தேர்தல் பயம் தோல்வி பயம் வந்துவிட்டது. அதனால் ஏதேதோ பேசுகிறார்கள். கூட்டணி ஆட்சி குறித்து அமித்ஷாவும், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியும் பேசித் தீர்ப்பார்கள்," என்று அவர் கூறினார்.

## "நாட்டின் மன உறுதியை குலைக்கவே அவசரநிலை பிறப்பிக்கப்பட்டது" மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்

புதுடெல்லி: ஜூன்.28-

நாட்டின் மன உறுதியைக் குலைக்கவே பிரதமர் இந்திரா காந்தி, அவசரநிலையைப் பிறப்பித்தார் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அவசரநிலை பிறப்பிக்கப்பட்டதன் 50ம் ஆண்டை ஒட்டி, பாஜகவின் இளைஞர் அமைப்பான பாரதிய ஜனதா யுவ மோர்ச்சா ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் உரையாற்றிய எஸ். ஜெய்சங்கர், "1975 ஆம் ஆண்டு அவசரநிலை பிறப்பிக்கப்பட்டபோது, அனைவரும், குறிப்பாக இளைஞர்கள், மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானார்கள். மாணவர்கள் விடுதியில் தூங்கிக் கொண்டிருக்கும்போது, திடீரென்று அவர்களில் சிலர் எந்தக் காரணமும் இல்லாமல் அழைத்துச் செல்லப்பட்டார்கள். இப்படி நடப்பது சாதாரணமானது அல்ல. இது அனைத்தும் நாட்டின் மன உறுதியைக் குறைக்கவே செய்யப்பட்டது.

1975 ஆம் ஆண்டு அவசரநிலை அமல்படுத்தப்பட்டபோது நான் ஒரு மாணவனாக இருந்தேன். என்ன நடந்தது, எல்லோரும் என்ன செய்ய வேண்டியிருந்தது என்பதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். அவசரநிலையிலிருந்து நான் கற்றுக்கொண்ட பாடம், "சுதந்திரத்தை ஒருபோதும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளாதீர்கள்" என்பதுதான்.

அவசரநிலை அரசியலுடன் தொடர்புடையது என்று எல்லோரும் கருதுகிறார்கள். ஆனால் அது, கலை, கலாச்சாரம், சினிமா, கல்வி உட்பட நாட்டின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதித்தது. அனைவரின் வாழ்க்கை முறையையும் பாதித்தது.

இந்திய அரசுக்கு உடனடி உள்நாட்டு அச்சுறுத்தல்கள் உள்ளன என்ற காரணத்தின் அடிப்படையில் அவசரநிலை விதிக்கப்பட்டது. சில சிறிய உள்நாட்டு பிரச்சினைகள் நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தல்களாக சித்தரிக்கப்பட்டன. பல முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பதிப்பகங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. நாட்டில் பத்திரிகைகள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. செய்தித்தாள்கள் அச்சிட அனுமதிக்கப்படவில்லை. பல செய்தித்தாள்கள் தங்கள் சொந்த வழியில் அவசரநிலையை எதிர்த்தன. அவசரநிலை காலத்தில் பல திரைப்படங்கள் நாட்டில் வெளியிட அனுமதிக்கப்படவில்லை.

அவசரநிலையின் போது, இரண்டு ஆண்டுகளில், ஐந்து அரசியலமைப்பு திருத்தங்கள் மற்றும் 48 அவசரச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஐந்து சட்டங்களில் மூன்று சட்டங்கள் அவசரநிலை தொடர்பானவை. 30வது திருத்தம் அவசரநிலை பிரகடனத்திற்கு எதிராக மக்கள் நீதிமன்றங்களை அணுக முடியாது என்று கூறியது. 39வது திருத்தம் பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கு எதிராக மக்கள் நீதிமன்றத்தை நாட முடியாது என்று கூறியது. 42வது திருத்தம் மக்களின் அடிப்படை உரிமைகள் நீர்த்துப்போகும் என்றும், நாட்டில் நீதித்துறையின் அதிகாரம் குறைக்கப்படும் என்றும் கூறியது. அவர்கள் இந்திய ஜனநாயகத்தின் இயல்பையே தாக்கினர்.

1980 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, அவசரநிலையை விதித்ததற்காக ஒரு துளி கூட வருத்தம் தெரிவிக்கவில்லை. மக்கள் மீது அவசரநிலையை விதித்ததற்காக காந்தி குடும்பத்தினர் அனைவரும் ஒருபோதும் வருத்தம் தெரிவித்ததில்லை. அவசரநிலை விதிக்கப்பட்டாலும், நாடு முழுவதும் உள்ள இந்தியர்கள் அதை எதிர்த்தனர். இது ஜனநாயகம் இந்தியர்களின் ரத்தத்தில் ஓடுகிறது என்பதை நிரூபிக்கிறது." என தெரிவித்தார்.

## அறிவுப் புதையல் தலைவர் கலைஞர்! கலைஞர் ஆட்சி என்பது, தமிழாட்சி! : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, ஜூன்.28-

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், சாகித்திய அகாதெமி மற்றும் ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம் சிறப்புநிலைத் தமிழ்த்துறை இணைந்து நடத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்கை தொடங்கி வைத்து, ஆற்றிய உரை.

சாகித்ய அகாதெமியும் J.N.U-வின் சிறப்புநிலைத் தமிழ்த்துறையும் நடத்தும் இந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுக் கருத்தரங்கை தொடங்கி வைத்து, அதேநேரத்தில் சிறப்பு மலரை வெளியிடும் வாய்ப்பை பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு தலைவர் கலைஞரின் மகனாக மட்டுமல்ல தமிழ்நாட்டு முதலமைச்சராகவும் பெருமித உணர்வோடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்! காலம் சற்றே கடந்திருந்தாலும், இந்த கருத்தரங்கை சிறப்பான வகையில் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்!

கவிதை புனைகதை செவ்வியல் நாடகம் திரை வசனம் உரைநடை ஆகிய தலைப்புகளில் நீங்கள் கருத்தரங்கு நடத்துவதே, ஒரு தலைப்புக்குள் சுருக்கிட முடியாத பன்முகத்திறன் பெற்றவர் நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை எடுத்துக்காட்டும் வகையில், இந்த கருத்தரங்கில் பங்கேற்று, கருத்துகளால் புது ஒளியுமிழ வந்திருக்கும் அனைத்து பேராசிரியர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்!

தலைவர் கலைஞரின் மேடை உரைகள் இலக்கியத்தின் மறுமுகம்! தலைவர் கலைஞரின் சட்டமன்ற உரைகள் சட்டமன்ற மாண்புக்கு இலக்கணம்! அவர் நடத்திய விவாதங்கள், அழகான ஆழமான கருத்து மோதல்கள்! தன்னுடைய வாழ்நாளில் 80 ஆண்டுகளை பொதுவாழ்க்கைக்கு ஒப்படைத்த மாபெரும் தலைவர் அவர்! அவர் நடத்திய போராட்டங்களும் பெற்ற வெற்றிகளும் இந்தியச் சமூகத்தை உணர நினைக்கும் எல்லோருக்குமான படிப்பினைகளாக அமைந்திருக்கிறது!

தென்றலைத் தீண்டியதில்லை; ஆனால், தீயைத் தாண்டியிருக்கிறேன் என்று அனுபவ பூர்வமாக சொன்னார் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! அவரின் வாழ்வையே தமிழ்ச் சமூகத்தின் உயர்வுக்காக ஸ்ரீ மேம்பாட்டுக்காக அர்ப்பணித்த காரணத்தால்தான் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக

ஐம்பது ஆண்டுகள் தமிழர்களுக்கான இயக்கத்திற்கு தலைவராக அவரால் இருக்க முடிந்தது!

தொட்ட துறைகள் எல்லாவற்றிலும் கோலோச்சிய தலைவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். இலக்கியத்தைதான் இளைப்பாறும் நிழலாக கருதினார்! அதனால்தான்



"எனது செங்கோலை யாரும் பறித்து விடலாம்; ஆனால், எனது எழுதுகோலை யாராலும் பறிக்க முடியாது" என்று சொன்னார் தலைவர் கலைஞர் அவர்கள்!

இலக்கியத்தின் வழி இந்தியர்கள் அனைவரையும் ஒன்றாக இணைக்கும் மகத்தான பணியினை சாகித்ய அகாதெமி செய்து வருகிறது. ஒருவரின் இலக்கியத் தகுதி என்பதற்கு சாகித்திய அகாதெமிதான் அளவுகோல் எனும் அளவுக்கு புகழோடு செயல்பட்டு வருகிறது!

எழுத்தாளர்களையும், மொழிபெயர்ப்பாளர்களையும் ஊக்குவிக்கும் சாகித்திய அகாதெமியின் பணி மகத்தானது! போற்றுதலுக்குரியது! அவர்கள் கலைஞரின் நூற்றாண்டு விழாவை யி.ழி.ஹிவுடன் இணைந்து இங்கு கொண்டாடுவது சிறப்புக்குரிய ஒன்றாக அமைந்திருக்கிறது!

இந்தியாவில் எத்தனையோ பல்கலைக்கழகங்கள் இருந்தாலும் யி.ழி.ஹிவுக்கு என்று, தனி குணம் உண்டு! கருத்தாழமிக்க உரையாடல்களுக்கு இடமாக உள்ள யி.ழி.ஹிவில் வெளிவரும் ஆய்வுகள், உலக அளவில் பேசப்படுகிறது!

அதனால்தான் உலக அளவிலான பல்வேறு பல்கலைக்கழகங்கள் யி.ழி.ஹிவோடு இணைந்து பணியாற்ற விரும்புகின்றன. அதனால்தான், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் யி.ழி.ஹிவில் தமிழுக்கு ஒரு தனி இருக்கை இருக்க வேண்டும் என்று விரும்பி, அதைச் செயல்படுத்திக் காட்டினார்!

15 ஆண்டுகள் கழித்து, இன்றைக்கு அந்த இருக்கையை தனி ஒரு துறையாக வளர்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த வகையில் 'தமிழ் இலக்கியவியல்' என்ற தனித்துறையை உருவாக்க 5 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கினோம்.

J.N.U-வோடு பன்னோக்கு கலையரங்கத்திற்கு அருகே உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவரின் சிலையை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாகித்ய அகாதெமியும், யி.ழி.ஹிவும் இணைந்து நடத்தும் இந்த விழா மூலமாக தலைவர் கலைஞர் அவர்கள் இந்திய இலக்கிய முகமாக அங்கீகரிக்கப்படும் நாளாக இது அமைந்திருக்கிறது.

இந்த நேரத்தில் இங்கு ஒரு செய்தியை குறிப்பிட விரும்புகிறேன்ஞ் இலக்கிய உலகில் பரவலாக அறியப்படும் செய்திதான் என்றாலும், அதை இந்த இடத்தில் பதிவுசெய்ய வேண்டியது அவசியம் என்பதால் சொல்கிறேன்ஞ் சாகித்திய அகாதெமி விருது பெறும் படைப்பாளர்களுக்கும் வீடு வழங்க வேண்டும் என்று முடிவு செய்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளன்று, 'கனவு இல்லம்' என்று ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தினேன்.

இந்த திட்டத்தில் இதுவரைக்கும் 15 அறிஞர்களுக்கு தமிழ்நாடு அரசு கனவு இல்லம் வழங்கி இருக்கிறது! பரிசுத்தொகை ஒரு இலட்சம் என்றால், வீட்டின் மதிப்பு சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும் மேல்! அதுவும், அந்த வீட்டிற்கான பத்திரச் செலவு முதலானவற்றையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது.

கனவு இல்லம் திட்டத்தின் நீட்சியாக சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்றவர்களுக்கும் கனவு இல்லம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு கனவு இல்லம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட திட்டம் இல்லை என்று சொல்லத்தக்க வகையில் இதனை நாம் செயல்படுத்தி இருக்கிறோம். இதற்கெல்லாம் ஒரே நோக்கம், படைப்பாளிகளை, அவர்கள் வாழும் காலத்திலேயே போற்ற வேண்டும் என்பதுதான்! எழுத்தாளரைப் போற்றும் சமூகம்தான் உயர்ந்த சமூகமாக இருக்க முடியும்!

இந்தச் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக மக்களின் உயர்வுக்காக அவர்களின் சமூக விடுதலைக்காக முற்போக்குச் சிந்தனைக்காக இயங்கிய இயங்கும் எழுத்தாளர்களை தமிழ்ச் சமூகம் உச்சி மோந்து கொண்டாட தவறியதே இல்லை! அந்த வழியில்தான் தலைவர் கலைஞர் அவர்களும் தமிழ் இலக்கியவாதியாக இருந்து, சிறப்பான படைப்புகளைக் கொடுத்தது மட்டுமல்லாமல் சிறப்பான படைப்பாளிகள் அனைவரையும் அங்கீகரித்தார்! அரவணைச்சார்! அதுதான் அவரது தனிச் சிறப்பு!

இலக்கியவாதிகளுக்காக முத்தமிழறிஞர் கலைஞர் செய்த ஏராளமான பணிகளில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்க ஒன்றுதான். தமிழ்நாட்டின் முதலமைச்சராக கலைஞர் பொறுப்பேற்ற காலங்களில் 108 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவர்களின் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகையாக 7 கோடியே 76 இலட்சம் ரூபாயை வழங்கியது!

அத்தகைய தலைவர் கலைஞரின் அடியொற்றி, நான் முதலமைச்சராக பொறுப்பேற்றது முதல் இந்த நான்கு ஆண்டுகளில் 36 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, நூலுரிமைத் தொகையாக 4 கோடியே 25 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது!

அதுமட்டுமல்ல, தன்னையே தமிழ்நாட்டுக்கு ஒப்படைத்த தலைவர் கலைஞர் அவர்களின் அனைத்துப் படைப்புகளும் நூலுரிமைத் தொகை ஏதுமின்றி, நாட்டுடைமை ஆக்கப்பட்டிருக்கிறது! 75 திரைப்படங்களுக்கு கதை திரைக்கதை வசனம் 15 புதினங்கள் 20 நாடகங்கள் 15 சிறுகதைகள் 210 கவிதைகள் என்று படைத்தவர் அவர்!

இலக்கியத்துறையில் மட்டுமல்ல, அரசியலிலும் கழக உடன்பிறப்புகளுக்கு ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் கரிகாலன் என்ற பெயரில் கேள்வி பதில் தான் நடத்திய இதழ்களில் எண்ணற்ற தலையங்கங்கள்

தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை ஆறு பாகங்களாக எழுதிய நெஞ்சுக்கு நீதி என்று எழுதியதோடு கலைஞரின் படைப்புகள் 178 நூல்களாக வெளிவந்திருக்கிறது.

இதெல்லாம் மட்டுமே ஏறத்தாழ ஏழு இலட்சம் பக்கங்களுக்கு மேல் இருக்கும்! இது அத்தனையையும் ஒருவர் படித்து முடிக்க வேண்டும் என்றாலே, ஒரு ஆயுள் தேவைப்படும்!

கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் அவர்கள் "கலைஞர் போல் அத்தனை படைப்புகளை எழுத வேறொருவர் முயன்றால் அதற்கு ஒரு பிறவி போதாது" என்று சொன்னார்! அத்தகைய அறிவுப் புதையல்தான் தலைவர் கலைஞர்! கலைஞர் ஆட்சி என்பது, தமிழாட்சி!

அதனால்தான், தமிழுக்கு செம்மொழி தகுதியை பெற்றுத் தந்து, செம்மொழி மாநாட்டையும் உலகம் பாராட்டும் வகையில் நடத்தி காட்டினார்! அவரின் வழித்தடத்தில், நம்முடைய திராவிட மாடல் அரசும் மொழிக்காக வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஏராளமான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி, தமிழாட்சியை நடத்தி வருகிறோம்!

"தமிழாய்ந்த தமிழ் மகன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வருதல் வேண்டும்" என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். அத்தகைய தலைவரான முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழ்த் தொண்டினை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்க்க இந்த கருத்தரங்கம் பயன்படவேண்டும்!

கலைஞரின் புகழ்பாடுவதாக மட்டுமல்லாமல், கலைஞர் உருவாக்க விரும்பிய சமத்துவ எண்ணமும் முற்போக்குச் சிந்தனையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்க இதுபோன்ற கருத்தரங்குகள் பயன்படவேண்டும்!

தமிழ்ச் சமூகத்தில் முத்தமிழறிஞர் கலைஞரைப் போன்ற படைப்பாளிகள் உருவாக வேண்டும். படைப்பாற்றல் பெற்றவர்கள் தொடர்ந்து தங்களின் படைப்பை எழுதி வழங்க வேண்டும்! சிறந்த படைப்புகளை இதுபோன்ற அமைப்புகள் பாராட்ட வேண்டும்!

படைப்பாளிகள் அவர்கள் வாழும் காலத்திலேயே அங்கீகாரம் பெற வேண்டும்! இதைத்தான் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது! சாகித்ய அகாதெமி போன்ற அமைப்புகளும் இந்தப் பணியை தொய்வில்லாமல் தொடர வேண்டும்.

## சிவகங்கை மாவட்ட 45வது ஆட்சியராக பொற்கொடி பதவியேற்றார் : கல்வி, விவசாயம், பால்வளத்துறைக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் ஆட்சியர் அறிவிப்பு

சிவகங்கை, ஜூன்.28-

சிவகங்கை மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சியர் கா. பொற்கொடி நேற்று பதவியேற்றார். இவர் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டத்தின் 45 வது ஆட்சிராக பொறுப்பேற்றார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து தமிழக அரசின் திட்டங்களை முறையாக செயல்படுத்தினாலே மாவட்டம் வளர்ச்சி அடையும். சிவகங்கை மாவட்டத்தை பொருத்தவரை



பள்ளிக்கல்வித்துறை, விவசாயம், பால்வளத்துறை ஆகிய துறைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படும். மத்திய மாநில அரசுகளின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு சென்று மாவட்டத்தின் வளர்ச்சியை மேம்படுத்துவேன் என்றார். பொறுப்பேற்றுள்ள நிலையில் எனது கவனத்திற்கு வரும் புகார்களை உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பேன் என கூறினார் . தொடர்ந்து துறைவாரியாக அதிகாரிகளை சந்தித்து மாவட்ட நிர்வாகம் குறித்து கேட்டறிந்தார்.

# இணைய தளத்தில் தவறான முறையில் சித்தரிக்கும் முகநூல் செய்திகள் தமிழக டிஜிபி இடம் புகார்




திருப்பூர், ஜூன்.28-

திருப்பூர் மாநகராட்சியில் வீட்டு வரி மற்றும் கடை கட்டிட வரிகளை பில் கலெக்டர் மற்றும் அரசு ஊழியர்களின் வரிவசூல் குறித்து கலந்துரையாடல்கள் ஆடியோவை பதிவை தவறாக பயன்படுத்தி அரசு மாநகராட்சி அதிகாரிகளையும் காவல்துறையினரையும் இழிவு படுத்தும் விதமாக பதிவுகளை செய்து 24 PRIME news channel என்ற பெயரில் Facebook மற்றும் Instagra. YouTube பகுதியில் பதிவிட்டு அதிக subscriber பெறுவதற்காக தமிழக போலீஸ் புகைப்படத்தை தவறாக சித்தரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த பதிவில் காவல் துறையினர் வாக்கி டாக்கி வைத்து பேசுவது போல் புகைப்படமும் காவலர் பின்னோக்கி லஞ்சம் வாங்குவது போலவும் தவறாக சித்தரித்து வெளியிடப்பட்டுள்ளது

இந்த செய்தியை பார்க்கும் முகநூல் வாசிகள் மத்தியில் காவல்துறை பற்றி இழிவான பதிவாக கருதப்பட்டு வருகிறது

அதுமட்டுமல்லாமல் அந்தப் பதிவில் ஏராளமான ஆபாசமான வார்த்தைகளும் பதிவிட்டு அரசு அதிகாரிகளையும் காவல்துறையினரையும் கடுமையாக இழிவு படுத்தும் வகையில் பதிவுகளை இணையதள வாசிகள் பதிவிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி அவதூறாக பதிவு செய்யப்பட்ட 24 PRIME news channel. Facebook மற்றும் youtube. Instagram சேனல் மீது கடலூரைச் சேர்ந்த செல்வமணி என்பவர் தமிழக டிஜிபி மற்றும் திருப்பூரில் இருந்து செய்தி வெளியிடப்பட்ட பகுதி என்பதாலும் திருப்பூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் இடமும் email மற்றும் பதிவு தபால் வாயிலாக புகார் அனுப்பப்பட்டுள்ளது

இதனால் போலீசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.




# மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்

திருப்பூர், ஜூன்.28-

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, காவல்துறை மற்றும் மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத் துறையின் சார்பில் போதையில்லாத தமிழ்நாடு என்ற நிலையினை உருவாக்கும் பொருட்டு விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாட்டை என்னும் இலக்கை அடையும் விதமாக போதை பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம், சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, காவல்துறை, மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத் துறையின் சார்பில் போதையில்லாத தமிழ்நாடு என்ற நிலையினை உருவாக்கும் பொருட்டு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இப்பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி தென்னம்பாளையம் வழியாக எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலை கல்லூரியில் நிறைவடைந்தது. இப்பேரணியில் 200க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவியர்கள் கலந்து கொண்டு போதை பொருள் எதிர்ப்பு தொடர்பான பதாகைகளை ஏந்தியவாறு பேரணியாக சென்றனர்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் போதைப்பழக்கத்தால் ஏற்படும் தீயவிளைவுகளை நான் முழுமையாக அறிவேன். தான் போதை பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன், மேலும் எனது குடுபத்தினரையும் நண்பர்களையும் போதைப்பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப்பழக்கத்திற்கு உள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாக தருவேன். போதைப் பொருட்களின் உற்பத்தி நுகர்வு பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப்பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்கு துணை நிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அற்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமாற உறுதி கூறுகிறேன் என கல்லூரி மாணவியர்கள் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுமொழி எடுத்துக்கொண்டார்கள்.

இந்நிகழ்வில், மாநகர துணை காவல் ஆணையர் திருமதி தீபா சத்தியன் இ.கா.ப. அவர்கள், மாவட்ட வன அலுவலர் திரு.ராஜேஷ், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மோகனசுந்தரம், உதவி ஆணையர் (கலால்) திருமதி செல்வி, கல்லூரி மாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் பவளவிழா முன்னாள் மாணவர் சங்கத்தின் சார்பாக திறந்தவெளி இறகுப்பந்து வளாகம் திறப்பு விழா

காரைக்குடி, ஜூன்.28-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் பவள விழா முன்னாள் மாணவர் சங்கத்தின் சார்பாக திறந்தவெளி இறகுப்பந்து வளாகம் திறந்து வைக்கப்பட்டது. முன்னாள் மாணவர் சங்கத்தினரால் உருவாக்கப்பட்ட இந்த திறந்தவெளி இறகுப்பந்து வளாகத் திறப்பு விழாவிற்கு கல்லூரியின் பொறுப்பு முதல்வர் முனைவர் நிலோபர் பேகம் தலைமை வகித்தார். முன்னாள் மாணவர் சங்கத் தலைவரும், மேனாள் துணைவேந்தருமான முனைவர் சுப்பையா மற்றும் கல்லூரியின் முன்னாள் மாணவரும் தடகள வீரருமான துரைசிங்கம் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி, புவி அமைப்பியல் துறைத் தலைவர் முனைவர் உதய கணேசன், தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் கோமளவல்லி, இயற்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கவிதா, தேசிய மாணவர் படை ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரவணன் மற்றும் கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் முனைவர் அசோக்குமார் மற்றும் முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர்களும், ஆசிரியர்களும் ஆசிரியர்களல்லாப் பணியாளர்களும் கலந்து கொண்டனர். இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை முன்னாள் மாணவர் சங்க செயலாளரும், நாச்சியப்ப சுவாமிகள் கல்லூரியின் முதல்வருமான முனைவர் சந்திரமோகன், பொருளாளர் நாராயணன் ஆகியோர் செய்திருந்தனர்.




# ஸ்ரீ நாராயணி பள்ளிகள் வளாகத்தில், சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது

வேலூர், ஜூன்.28-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூரில் உலக புகழ்பெற்ற ஸ்ரீபுரம், திருமலைக்கொடி ஸ்ரீ நாராயணி பள்ளி வளாகத்தில் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடத்தைச் சேர்ந்த 1,000 பெண் சேவத்திரிகள் ஸ்ரீ சக்கர (நட்சத்திர வடிவ) வடிவத்தில் நிகழ்த்திய யோகாசன நிகழ்ச்சி, ஸ்ரீபுரம் பொற்கோயிலின் வடிவத்தை அடையாளமாக பிரதிபலிக்கும் வகையில் யோகா தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்கு ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடத்தின் அறங்காவலரும் இயக்குநருமான எம்.சுரேஷ்பாபு தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக ஆரோக்கிய சுகாதார மையத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமை சித்த மருத்துவருமான டாக்டர் ஜி. சிவராமன், பி.எஸ். எம்.எஸ்., பி.எச்.டி., சென்னை கலந்துகொண்டு யோகா குறித்தும் உடலுக்கு ஆரோக்கியமான உணவுகள் குறித்தும் சிறப்புரையாற்றி விழாவை சிறப்பித்தனர்.

அர்ப்பணிப்புள்ள பெண் சேவத்திரிகள் மற்றும் யோகா பயிற்சியாளர்களுக்கு டாக்டர் சுரேஷ் பாபு தனது மனமார்ந்த பாராட்டுகளைத் நன்றியையும் தெரிவித்தார்.




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள செல்வா மருத்துவமனையில் புதிதாக உருவாக்கப்பட்ட செல்வன் ஸ்கேன்ஸ்-டயக்னாஸ்டிக் கர்ப்பிணி பெண்களுக்கான ஸ்கேன் சிறப்பு முகாம் ஜூலை 1 ஆம் தேதி முதல் ஜூலை 05ஆம் தேதி வரை நடைபெறுகிறது நேரம் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை ஸ்கேன் பார்க்க முடியும் இதில் 7ஆம் வாரம் முதல் 39 வது வாரம் வரை பார்க்கும் அனைவருக்கும் 50% சலுகைகள் உண்டு கர்ப்பம் உறுதி செய்யப்படும் ஸ்கேன் 600, முதல் மூன்று வாரங்களுக்கான அனாமலி மற்றும் NT ஸ்கேன் 700, ஐந்தாம் மாதம் அனாமலி 950, குழந்தை வளர்ச்சிக்கான ஸ்கேன் 600 முன் பதிவு அவசியம் தொடர்பு எண்கள் 9789720431, 6369422418 மருத்துவ மனையின் சிறப்பு அம்சங்கள் பெருநகரங்களில் உள்ள பல்நோக்கு மருத்துவமனையில் உள்ள நவீன உயர் தர மருத்துவ வசதிகளை தரம் குறையாமல் முடிந்த அளவிற்கு குறைந்த கட்டணத்தில் குறிப்பாக மானாமதுரை மற்றும் சுற்றுவட்டார பகுதியில் உள்ள பொதுமக்கள் அலைச்சல் இன்றி உடனுக்குடன் மருத்துவம் கிடைக்க செய்வதே செல்வா மருத்துவமனையின் நோக்கமாகும்..







# தாம்பரம் அடுத்த ராஜகீழ்ப்பாக்கம் சத்யா ஏஜென்சி 323 வது கிளை திறப்பு விழா

தாம்பரம், ஜூன்.28-

செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு தாம்பரம், ராஜகீழ்பாக்கம், தாம்பரம் சேலையூர் பத்திரப்பதிவு அலுவலகம் எதிரில் அமைந்துள்ள சத்யா ஏஜென்சி 323 வது கிளை பிரம்மாண்டமாக திறக்கப்பட்டது. வீட்டிற்கு தேவையான அனைத்து புதிய வகை பொருள்கள் மற்றும் சுப காரியங்களுக்கு தேவையான அனைத்து பொருள்கள் கிடைக்கும் . புதிய வண்ணம் கொண்ட புதிய ரகங்கள் கொண்ட மிக்ஸி, கிரைண்டர், அயன் பாக்ஸ், வாஷிங் மெஷின் ,பிரிட்ஜ் ,டிவி ,ஏசி புதிய வகை செல்போன்கள் மற்றும் தவணை முறையில் சுலபமாக கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொருள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு திறப்பு விழா முன்னிட்டு சிறப்பு சலுகை பரிசாக ஒரு கிராம் தங்க நாணயம் வழங்கப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட நிர்வாக இயக்குனர், ஜாக்சன், பொது மேலாளர், சீதாராம், துணை மேலாளர், பன்னீர் செல்வம் மற்றும் சத்யா ஏஜென்சி பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# இளையான்குடியில் கலைஞர் 102 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் திமுகவின் நான்கு ஆண்டு சாதனை விளக்க கூட்டம்

இளையான்குடி, ஜூன்.28-

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கினங்க தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி முத்தமிழர் கலைஞர்

102 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நாடு போற்றும் நான்காண்டு சாதனைகளில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் மானாமதுரை மேற்கு ஒன்றியம் மானாமதுரை கிழக்கு ஒன்றியம் இளையான்குடி கிழக்கு ஒன்றியம் இளையான்குடி தெற்கு ஒன்றியம் ஆகிய பகுதிகளில் நடந்த கூட்டங்களில் முன்னாள் அமைச்சர் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர்



ஆ. தமிழரசி ரவிக்குமார் கலந்து கொண்டு கலைஞர் தமிழ்நாட்டுக்கு ஆற்றிய சிறப்புகள் மகளிர்க்கு கொண்டுவந்த சட்டங்கள் அதன் வழியில் இன்று கழகத்தையும் ஆட்சியையும் சிறப்பாக நடத்தி வரும் முதல்வரின் நான்கு ஆண்டு திட்டங்களை பட்டியலிட்டும் இதன் மூலம் மானாமதுரை தொகுதிக்கு கிடைத்துள்ள வளர்ச்சிப் பணிகள் திட்டங்கள் ஆகியவற்றை எடுத்துரைத்து சிறப்பித்தனர்.இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் சேங்கைமாறன் மானாமதுரை மேற்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை மானாமதுரை கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை ராஜாமணி இளையான்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் தமிழ் மாறன் இளையான்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு செல்வராஜ் மற்றும் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பொற்கோ கழக பேச்சாளர்கள் இளைஞர் அணியினர் பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்..

# சிவகங்கை மாவட்டம்: விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற விவசாயிகள் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்தனர்





முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்தியாவிற்கே முன்மாதிரியாக, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி விவசாயிகளின் காவலனாக திகழ்ந்தார்கள். அவர்களின் வழியில் செயல்பட்டு கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலன் காக்க பல்வேறு திட்டங்களை அறிவித்து, விவசாயிகளின் நலன் காத்து வருகிறார்கள்.

அதனடிப்படையில், விவசாயிகள் வாங்கிய பொதுக்கடன்களை தள்ளுபடி செய்தும், கூட்டுறவு வங்கிகளின் மூலம் வழங்கிய நகைக் கடன்களை தள்ளுபடி செய்தும், மகளிர் சுயஉதவிக் குழுவினர் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்து, வேளாண் பெருங்குடி மக்களை பாதுகாத்து வருகிறார்கள்.

அதேபோல், விவ சாயப் பெருங்குடி மக்கள் தங்களது உற்பத்தித்திறனை குறைத்து, இலாபத்தினை அதிகரித்திடவும், வேளாண் இயந்திரங்களை அதிகளவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டும், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மூலம் இயந்திரங்களை வாங்குவதற்கான நிதியுதவியினையும், சிறு விவசாயிகளுக்கு தேவையான பண்ணைக்கருவிகள், தார்ப்பாய்கள் போன்றவைகளும் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்பாராதவிதமாக, வேளாண் பயிர்கள் சேதம் அடைந்தால், அதற்கான இழப்பீட்டு காப்பீடுகளும், பங்குப்பத்திரங்களும் தமிழக அரசின் சார்பில் விவசாயிகளுக்கு வழங்கிடவும் வழிவகை செய்துள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் துயரைத் துடைத்திடவும், அவர்கள் மேற்கொள்ளும் தொழிலை மேம்படுத்திடவும், விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்தார்கள். அவ்வாக்குறுதியினை நிறைவேற்றிடும் பொருட்டு, குறுகிய காலத்தில் 1 இலட்சம் மின் இணைப்புக்களை வழங்கிடவும் உத்தரவிட்டு, அதனை செயல்படுத்தி உள்ளார்கள்.


தமிழகத்தில் குறுகிய காலத்தில் 1 இலட்சம் மின் இணைப்புகள் வழங்கி, வரலாற்று சாதனையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிகழ்த்தியுள்ளார்கள்.

கடந்த காலங்களில் மின் இணைப்பிற்காக ரூ.2.5 இலட்சம் கட்டினால் மட்டுமே மின் இணைப்பு கிடைத்து வந்த நிலையினை மாற்றி, எவ்வித பொருளாதாரச் செலவும் இல்லாமல் விவசாயிகளின் நலன் காத்திட இலவச மின்சாரத்தினை வழங்கியுள்ளார்கள்.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் மாவட்டத்தில் மொத்தம் 3,862 விவசாயிகள் பயன்பெறும் வகையில், ரூ.4,223 இலட்சம் மதிப்பீட்டிலான மின் இணைப்பு வழங்கப்பட்டு, விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர். அதில், 2024 2025 ஆம் நிதியாண்டில் மட்டும் சிவகங்கை மாவட்டத்தில் 172 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடதக்கதாகும்.

இத்திட்டத்தின் கீழ், புதிய விவசாய மின் இணைப்பு பெற்று பயன்பெற்ற, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், இராஜகம்பீரம் ஊராட்சிக்குட்பட்ட சலுப்பானோடை கிராமத்தை சேர்ந்த திரு.பாண்டி அவர்கள் (பயனாளி) தெரிவிக்கையில்,

நான் இராஜகம்பீரம் ஊராட்சிக்குட்பட்ட சலுப்பானோடை கிராமத்தில் வசித்து வருகிறேன். சலுப்பானோடை கிராமத்தில் புல எண்: 43/5Aல் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு



கேட்டு விண்ணப்பித்து, புதிய விவசாய மின் இணைப்பிற்காக காத்திருந்தேன். விவசாய நிலத்தை நம்பியே எங்களது வாழ்வாதாரம் உள்ளது. அவ்வப்போது வரும் மழையை நம்பி, அதனை அடிப்படையாக கொண்டு, விவசாயம் செய்து வாழ்ந்து வந்தேன்.

முன்னதாக, பல வருடங்களுக்கு முன்பு எனது விவசாய நிலத்திற்கு ஆழ்துளை கிணற்றிக்கான விவசாய மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்தும் பயனில்லாமல் இருந்தது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தலின் போது விவசாய மின் இணைப்பு வழங்குவேன் என்று வாக்குறுதியினை விவசாயிகளுக்கு அளித்தார்கள். அந்த வாக்குறுதியினை நிறைவேற்றிடும் பொருட்டு, என்னைப் போன்ற விவசாயிகள் பயன்பெறும் வகையில், இத்திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்தி, விவசாயிகளின் உற்ற தோழனாக திகழ்ந்து வருகிறார்கள்.

இயல்பு திட்டத்தின் கீழ் எனக்கு தற்போது புதிய விவசாய மின் இணைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த மின் இணைப்பை கொண்டு சுமார் 2 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து பயனடைந்து வருகின்றேன். எங்களைப் போன்ற விவசாயிகளின் நிலையை சிந்தித்து, நாங்கள் பயன்பெறும் வகையில் இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் வாழ்நாள் நன்றிக்கடன் பட்டுள்ளோம் என பயனாளி திரு.பாண்டி அவர்கள் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ், புதிதாக விவசாய மின் இணைப்பு பெற்று, பயன்பெற்ற சிவகங்கை ஊராட்சி ஒன்றியம், கோமாளிபட்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி கார்த்திகை அம்மாள் அவர்கள் (பயனாளி) தெரிவிக்கையில்,

நான் மலம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கோமாளிபட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கோமாளிபட்டி கிராமத்தில் புல எண்: 159/3Bல் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்து, புதிய விவசாய மின் இணைப்பிற்காக காத்திருந்தேன். விவசாய மின் இணைப்பு இல்லாமல் மழையை நம்பியே விவசாயம் செய்து வந்தோம்.

அச்சமயம், தமிழக முதல்வரின் ஆணையின்படி, இயல்பு திட்டத்தின் கீழ் எனக்கு கடந்த 07.11.2024 அன்று புதிய விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டது. இந்த மின் இணைப்பை கொண்டு 2.25 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து, அதன் வாயிலாக எங்களது வாழ்வாதாரம் செழித்துள்ளது. புதிதாக விவசாய மின்



இணைப்பு வழங்க உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களைப் போன்ற விவசாயிகளின் சார்பில் மனமார்ந்த நன்றியினை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என பயனாளி திருமதி கார்த்திகை அம்மாள் அவர்கள் தெரிவித்தார்.

**தொகுப்பு:**
**மு.ராஜசெல்வன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சிவகங்கை மாவட்டம்.**



■ மதுரை மத்திய சிறையில் சர்வதேச போதை ஒழிப்பு தினம் இந்திய சிறைப்பணி குழுவுடன் இணைந்து அனுசரிக்கப்பட்டது. சிறைக்கண்காணிப்பாளர் சதீஸ்குமார் முன்னிலையில் மதுரை சமூகவியல் கல்லூரியின் முன்னால் முதல்வர் முனைவர் ஜேனட் போதை பழக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகளையும் அதிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைத்தார். அருட்தந்தை ஜேம்ஸ் பால்ராஜ் மறுவாழ்வு மற்றும் மீட்டுருவாக்கம் பற்றி எடுத்து இயம்பினார். மதுரை செந்தமிழ் கலைக்கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு பாடல் மற்றும் நாடகம் மூலம் 'வேண்டாம் போதை' என்ற கருத்தினை வலியுறுத்தினார். நிகழ்ச்சியின் இறுதியில் போதைப் பொருட்களிலிருந்து விலகி ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வோம் என உறுதிமொழி எடுக்கப்பட்டது.

## தமிழக முதல்வரை சந்தித்து வாழ்த்து



■ வேலூர் மாவட்டம், வேலூருக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை மரியாதை நிமித்தமாக வேலூர் நரூவீ மருத்துவமனை தலைவர் சம்பத், பொது மேலாளர் நிதின் சம்பத் ஆகியோர் நேரில் சந்தித்து புத்தகம் வழங்கி வாழ்த்து தெரிவித்து வரவேற்றனர்.



■ புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், சித்தன்னவாசல் சுற்றுலா தலத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத் துறை ஆகியவை இணைந்து நடத்திய சித்தன்னவாசல் கோடை விழா 2025 நிகழ்ச்சியில், மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கபாடி விளையாட்டுப் போட்டியினை துவக்கி வைத்தார். உடன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.அ.அக்பர்அலி, மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு.ரா.கார்த்திக் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம் சேடபட்டி ஊராட்சி ஒன்றியம், சேடபட்டி, குடிச்சேரி, அத்திப்பட்டி, வண்டப்புலி, துள்ளுக்குட்டிநாயக்கனூர், மல்லபுரம் மற்றும் உத்தப்புரம் ஆகிய கிராமங்களில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டபணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

# அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் மூலம் 64 தொழில் முனைவோர்களுக்கு ரூ. 8.32 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது

## மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் செய்தியாளர் பயணத்தில் தகவல்

கரூர், ஜூன்.28-

கரூர் மாவட்டம், உப்பிடமங்கலம் பகுதியில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் மானியம் பெற்று இயங்கி வரும் தொழில் நிறுவனத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. மீ. தங்கவேல் செய்தியாளர் பயணம் மேற்கொண்டு செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு அரசு புதிய தொழில் முனைவோர்களை உருவாக்கவும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கவும், சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் மற்றும் தொழில் துறையின் சார்பாக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக நடப்பு பட்ஜெட் கூட்ட தொடரில் சிறு குறு நடுத்தர தொழில் துறைக்கு ரூ. 5,833 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் நோக்கம் பதிய தொழில் முனைவோர்களை உருவாக்கவும், அதிகளவு வேலைவாய்ப்புகளை உருவாக்குதேயாகும். அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் என்ற புதிய திட்டத்தினை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும் அறிமுகப்படுத்தி உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி, சேவை மற்றும் வணிகம் சார்ந்த தொழில் திட்டங்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும். புதிதாக தொடங்கப்படும் தொழில்களுக்கும் மற்றும் இயங்கி கொண்டிருக்கும் தொழில் நிறுவனங்களின் விரிவாக்கத்திற்கும் மானியம் வழங்கப்படும். மானியம் மொத்த திட்ட மதிப்பீட்டில் 35 சதவீதம் ஆகும். மானிய உச்ச வரம்பு உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.1.00 கோடி, சேவை சார்ந்த தொழில்களுக்கு ரூ.75.00 இலட்சம், வணிகம் சார்ந்த தொழில்களுக்கு ரூ.50.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கடன் திரும்ப செலுத்தும் காலம் முழுவதும் (10 ஆண்டுகளுக்கு மிகாமல்) 6 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படும். தொழில் முனைவோர் தம் சொந்த நிதியில் செயல்படுத்தும் திட்டங்களுக்கும் 35 சதவீதம் மானியம் வழங்கப்படும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பிரிவை சார்ந்த எந்த தனி நபரும் மற்றும் பங்குதாரர், கூட்டாண்மை, பிரைவேட் லிமிடெட் நிறுவனங்களும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற கல்வி தகுதி ஏதுமில்லை. வயது வரம்பு 18 முதல் 55 குள் இருக்க வேண்டும்.

அந்த வகையில், இன்றைய தினம் மாவட்ட தொழில் மையம் சார்பாக அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் மானியம் பெற்று கரூர் நகரப் பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் தொழில் நிறுவனத்தை மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

அதனடிப்படையில் கரூர் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் மூலம் 64 தொழில் முனைவோர்களுக்கு ரூ. 8.32 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தொழில் தொடங்க இருப்பவர்கள் தாந்தோனி மலை மாவட்ட தொழில் மையத்தை நேரில் பார்வையிட்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் திரு. மீ. தங்கவேல் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட மேலாளர் திரு. ரமேஷ், உதவி பொறியாளர் திரு. மனோஜ், தொழில் நிறுவன உரிமையாளர் திரு. பிரபு மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் சேடபட்டி ஊராட்சி ஒன்றியம், சேடபட்டி, குடிச்சேரி, அத்திப்பட்டி, வண்டப்புலி, துள்ளுக்குட்டிநாயக்கனூர், மல்லபுரம் மற்றும் உத்தப்புரம் ஆகிய கிராமங்களில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டபணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன்குமார் ஆய்வு மேற்கொண்டார்



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடம் மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்



தேனி மாவட்டம் தெற்காசிய தேசிய யூத் கூடைப்பந்து போட்டியில்

## தங்கப்பதக்கம் பெற்ற விளையாட்டு விடுதி மாணவருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தார்

தேனி, ஜூன்.28-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாலத்தீவில் நடைபெற்ற தெற்காசிய தேசிய யூத் கூடைப்பந்து போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற விளையாட்டு விடுதி மாணவர் சுஜீத் என்பவரை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார். தெற்காசிய தேசிய யூத் கூடைப்பந்து போட்டி மாலத்தீவில் 12.06.2025 முதல் 16.06.2025 வரை நடைபெற்றது. இப்போட்டியில் இந்தியா, இலங்கை, மாலத்தீவு மற்றும் வங்காளதேசம் போன்ற நாடுகளின் விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். இதில் இந்திய கூடைப்பந்து அணிக்கு தேனி மாவட்ட விளையாட்டு விடுதி மாணவர் சுஜீத் கலந்து கொண்டு, போட்டியில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர் விளையாட்டுத் துறையில் சாதனை படைக்க வேண்டும் என்பதற்காக விளையாட்டு பயிற்சி, மற்றும் சத்தான உணவுடன் கூடிய விளையாட்டு விடுதிகள் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில் விளையாட்டு விடுதி மாணவர் தேனி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளதை முன்னிட்டு வெற்றி பெற்ற மாணவருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தார். இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவக்குமார் மற்றும் கூடைப்பந்து பயிற்றுநர் ரமேஷ்ராயர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## 44 அணைக்கட்டு கெங்கநல்லரில் கலைஞர் கருணாநிதி சிலை திறப்பு விழா: தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் பங்கேற்று திறந்து வைப்பு



வேலூர், ஜூன்.28-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, கங்கநல்லூர் ஊராட்சி, சந்தைமேடு அருகே, ரூ.1கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலைஞர் அறிவாலயம், அலுவலகம், நூலகம், கலைஞர் கருணாநிதி சிலை திறப்பு, 30அடி உயர திமுக கொடிக்கம்பத்தில் கொடி ஏற்றுதல் மற்றும் நூலகம் திறப்பு விழா, பல்வேறு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் கோலாக லமாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திமுக தலைவரும், தமிழக முதல் வருமான மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து பார்வை யிட்டனர்.

இந்நிகழ்ச்சி கங்கநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் செந்தி ல்குமார் முன்னிலையில், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் மற்றும் திமுக மாவட்ட செயலாளருமான நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக கலைஞரின் நெருங்கிய தோழரும், மக்கள் செல்வந்தர் மண்ணின் மைந்தர், பொதுச் செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரை முருகன், பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, வேலூர் எம்.பி.கதிர் ஆனந்த், அரக் கோணம் எம்.பி.ஜெகத்ரட்சகன், வேலூர் எம்.எல்.ஏ கார்த்திகேயன், ஊராட்சி குழு தலைவர் மு பாபு, துணை மேயர் சுனில்குமார், காட்பாடி வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா புஷ்பலதா, பி.ஜி.காட்பாடி ஆனந்தன், டீட்டா சரவணன் மற்றும் காட்பாடி நிர்வாகிகள், வேலூர் திமுக ஞானசேகரன் மற்றும் நிர்வாகிகள், அணைக்கட்டு திமுக நிர்வாகிகள், ஏரிப்புதூர் வெங்கடேசன், சி.பாஸ்கரன், இலவம்பாடி தாய்வழி குடிசை முக்கிய நிர்வாகிகள் ஜெய்சங்கர், பிரகாஷ், குணசேகர், குமார், மோகன் சத்யா, வெங்கடேசன், யுவராஜ், வினோத் உட்பட பல்வேறு கிராமங்களில் இருந்து சுமார் ஆயிரக்கணக்கான திமுகவினர் கலந்து கொண்டனர். இந்த கலைஞர் அறிவாலயத்தின் நிர்வாகிகள் சார்பில் மு.க.ஸ்டா லினுக்கு செங் கோல் வழங்கி, மாலை அணிவித்து கௌரவி க்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் கலை நிகழ்ச்சிகளை உற்று நோக்கி கவனித்து ரசித்தார். இதனைத் தொடர்ந்து அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமாரின் ஒரு மாத சம்பளத்திலிருந்து, பள்ளி மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டும் வகையில் நலத்திட்ட விழாவும், சிலம்பத்தில் உலக சாதனை படைத்த இரண்டு மாணவர்களுக்கும், கல்வியில் சிறந்து விளங்கிய மாணவ மாணவியர்கள் சாருமதி, முத்துலட்சுமி, சரண்யா, சந்தியா, ஷாஜிதா, தனுஸ், கிஷோர், லக்ஷிதா, அப்ரீன் ஆகியோருக்கு முதல்வர் பரிசு கவர் வழங்கி பாராட்டி வாழ்த்தினார். இதனைத் தொடர்ந்து கருணாநி தியின் திருவுருவ சிலை திறந்து வைத்ததை தொடர்ந்து கலைஞர் அறிவாலய அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, நூலகத்தை பார்வையிட்டு கட்சி நிர்வாகியின் குழந்தைக்கு பெயர் சூட்டினார். இதில் காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடாக பல்வேறு மாவட்டங்களில் இருந்து காவல்துறை உயர் பதவி ஊழியர்கள், உயர் பதவி தடவியல் பாதுகாப்பு நிபுண காவலர்கள், மாவட்ட எஸ்.பி., டி.எஸ்.பி. மற்றும் இன்ஸ்பெக்டர்கள் உட்பட சுமார் 1500க்கும் மேற்பட்ட ஆண் பெண் காவல் பணியாளர்கள் மற்றும் தீயணைப்பு படை குழுவினர் உட்பட பலர் பணியில் அமர்த்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.




கௌரிவாக்கத்தில் மக்கள் பசுமை இயக்கம் சார்பில்

## சர்வதேச போதை பொருள் பயன்பாடு மற்றும் போதை பொருள் கடத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி

கௌரிவாக்கம், ஜூன்.28-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தாம்பரம் அடுத்த கௌரிவாக்கத்தில் மக்கள் பசுமை இயக்கம் சார்பில் சர்வதேச போதை பொருள் பயன்பாடு மற்றும் போதை பொருள் கடத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நிறுவன தலைவர் நாஞ் சில் சி.மனோகரன் தலைமையில் மக்கள் பசுமை இயக்கத்தின் மாநில அமைப்புச் செய லாளர் ரேகா ரெங்கையன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப் பாளராக முதல்வர் டாக்டர் ஆர்.சரவணன், எஸ்.ஐ. வி.இ.டி. கல்லூ ரியின் ரோட்டராக்ட் கிளப்பின் உதவிப் பேராசிரியர், இயற்பியல் மற்றும் ஆசிரியர் ஒருங்கிணை ப்பாளர் டாக்டர் டி. சுஜாதா தலைவர், இயற்பியல் துறை, இணை என்.சி.சி அதிகாரி கேப்டன் ஐ.பிருதி விராஜ், எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியின் கணிதத் துறையின் உதவிப் பேராசிரியர் மற்றும் ஆசிரிய ஒருங்கி ணைப்பாளர் ஆர்.காயத்ரி பிரியா, எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியின் நிர்வாக அலுவலகம் மற்றும் ஆசிரிய ஒருங்கிணைப் பாளர்ரோட்டராக்ட் கிளப்பின் எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியின் நிர்வாக அலுவலகம் மற்றும் ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் என்.மோகனா ஆகியோர் கலந்து கொண்டு எஸ்.ஐ.வி. இ.டி கல்லூரி வளாகத்தில் இருந்து வேளச்சேரி சாலை வரை விழிப்புணர்வு பேரணியை நடத்தினார்கள் இதில் கல்லூரி மாணவ மாணவிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மனித சங்கிலி நடத்தி உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர் இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு அமைப்பு செயலாளர் கோபி, இளைஞரணி செயலாளர் அபினேஷ், உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்




## தாம்பரத்தில் மாபெரும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

தாம்பரம், ஜூன்.28-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழ்நாடு மதுபோதை மறுவாழ்வு மையம் சார்பில் சர்வதேச போதை பொருள் பயன்பாடு மற்றும் போதை பொருள் கடத்தல் எதிர்ப்பு தினத்தை மாபெரும் விழிப்புணர்வு பேரணி தலைவர் சீமான் தமிழ்வேந்தன் அவர்களின் ஆலோசனைப்படி செயலாளர் பீனிக்ஸ் பாரி, சங்க பொருளாளர் டாக்டர் எஸ்.முருகன் ஆகியோர் தலைமையில் நடைப்பெற்றது. பேரணியை சமூக நலத்துறை மாவட்ட அலுவலர் சங்கீதா, சமூக ஆர்வலர் விஜயலட்சுமி ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

போதைக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி தாம்பரம் மாநகராட்சியில் இருந்து பல்வேறு சாலைகள் வழியாக, சண்முகம் சாலையில் வந்தடைந்தது. இந்த நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள் கலந்துகொண்டு போதைக்கு எதிரான உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.



## வேலூரில், அரசு மருத்துவமனையை தமிழக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்து மருத்துவமனை வளாகத்தை பார்வையிட்டனர்

வேலூர், ஜூன்.28-

வேலூர் மாவட்டம், வேலூர் கொசப்பேட்டை, வேலூர் பழைய அரசு மருத்துவமனை இடத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேலூர், அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தரை மற்றும் ஏழு தளங்களுடன் 197 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு வேலூர் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையை திறந்து வைத்தார். இந்த விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், அமலு, கார்த்திகேயன், ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள், துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட ஏராளமானோர் இந்த மருத்துவமனை திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.



## வேலூரில், இந்தியாஸ் தலைமையில் விஜய் பிறந்தநாள் விழா முன்னிட்டு இனிப்புடன் அன்னதானம் மற்றும் நலதிட்ட விழா

வேலூர், ஜூன்.28-

வேலூர் மாவட்டம், மாங்காய் மண்டி அருகே தமிழக வெற்றி கழகத்தின் நிறுவனத் தலைவர் விஜய் 51ம் பிறந்தநாளை முன்னிட்டு, வேலூர் மேற்கு மாவட்ட தொண்டர் அணி இம்தியாஸ் தலைமையில் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி, நலதிட்ட விழாவாக பெண்களுக்கு புடவைகள் வழங்கினர். இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஆஷிக் ஹைதர் மற்றும் கட்சி நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.




பேரணாம்பட்டில் பள்ளிக் கல்வித் துறை விதிமுறைப்படி

## கட்டமைப்பு வசதியின்றி பாதுகாப்பின்றி, வீடுகளில் செயல்படும் தனியார் பள்ளிகள் மாவட்ட நிர்வாக சம்பந்தப்பட்ட உயர் பதவி ஊழியர்கள் நடவடிக்கை எடுப்பார்களா..?

வேலூர், ஜூன்.28-

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு தாலுகா, பேர்ணாம்பட்டில் லாரி ஷர்ட் அருகில் உள்ள அல் அமீன் என்ற தனியார் பள்ளியும் விஸ்டம் தனியார் பள்ளியும் பல வருடங்களாக, பள்ளிக்கல்வித்துறை விதிமுறைப்படி செயல்படாமல், பள்ளிக்கு உண்டான கட்டமைப்பு பாதுகாப்பு கட்டமைப்பின்றி வீடுகளில் பள்ளிகள் இயங்கி வருகிறது. இந்த இரண்டு பள்ளிகளுக்கும் விளையாட்டு மைதான வசதியும், குடிநீர் வசதிகளும் எதுவும் கிடையாது. மேலும், இந்த இரண்டு தனியார் பள்ளிகளும் குழந்தை களுக்கு உரிய பாதுகாப்பு இல்லாமல் இருக்கும் பட்சத்தில், ஏதேனும் விபரீதம் ஏற்பட்டால் இப்பள்ளிகளில் படிக்கும் சிறுவர் சிறுமியர் மாணவ மாணவிகளுக்கும் எந்த பாதுகாப்பும் கிடையாது இப்பகுதி பொதுமக்கள் கூறுகின்றனர்.

எனவே, இது குறித்து மாவட்ட நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் பதவி ஊழியர்கள் பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, மனிதாபிமானத்துடன் செயல்பட்டு வீடுகளில் பாதுகாப்பில்லாமல் இயங்கி வரும் பள்ளிகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்பதே பெற்றோர்கள் மற்றும் பேரணாம்பட் பொது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



## விஜய் 51வது பிறந்த நாளை முன்னிட்டு 58வது வார்டு சார்பில் 251பேருக்கு சிக்கன் பிரியாணி வழங்கபட்டது

பெருங்களத்தூர், ஜூன்.28-

செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூர் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் தளபதி விஜய் அவர்களின் 51வது பிறந்த நாளை முன்னிட்டு கழக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் அவர்களின் அறிவுறுத்தல் படி செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட கழகச் செயலாளர் டி.சரத்குமார் அவர்களின் ஆணைக்கிணங்க பெருங்களத்தூர் தெற்கு பகுதி மோ.செந்தில்குமார் அவர்களின் தலைமையில் 58வது வார்டு நிர்வாகிகள் ஏ.பாளையம், வி.விஜயபாஸ்கர், எஸ்.கே.ரேவா, ஆர்.கணேஷ், எம்.விக்னேஷ், எம்.மதன் இ.பார்த்திபன், ஆகியோரின் ஏற்பாட்டில் இந்திராகாந்தி சிலை எதிரில் பொதுமக்கள் 251பேருக்கு சிக்கன் பிரியாணி வழங்கபட்டது இதில் நிர்வாகிகள் ஆர்.வெங்கட், எம்.செந்தில், கே.பிரபா, ஆர்.சங்கர், கே.கவி.எஸ்.சூர்யா, வி.தினேஷ், என்.நந்தகுமார், இ.சுரேஷ், இ.அரவிந்த், எஸ்.மல்லிகா எஸ்.பவானி மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி பட்டியல் வெளியேற்ற கோரிக்கைக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் விரைவில் பேசுவார்



இராமநாதபுரம், ஜூன்.28-

இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனியிடம் தேவேந்திர குல வேளாளர் சமூக செயல் பாட்டாளர், பரமக்குடி சுரேஷ் பட்டியல் வெளி யேற்ற கோரிக் கையை நிறைவேற்ற ஆதரவு தர வேண்டும் எனவும், பட்டியல் வெளியேற்ற கோரிக்கைக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் பேச வேண்டும் எனவும் தொட ர்ந்து வலியுறுத்தி வருகிறார். பட்டியல் வெளியேற்ற கோரிக்கை சம்பந்தமான ஆவணங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனியிடம் சமூக செயல்பாட்டாளர் பரமக்குடி சுரேஷ் வழங்கி இருக்கிறார்

நவாஸ் கனியின் வெற்றியில் தேவேந்திர குல வேளாளர் சமூக மக்களின் பெரும்பங்கு உள்ளது. அதனால் எனது தொப்புள் கொடி சொந்தங்களான தேவேந்திர குல வேளாளர் சமூக மக்களுக்காக நான் நாடாளுமன்றத்தில் நிச்சயமாக பேசுவேன் என்று உறுதியளித்துள்ளார்

பட்டியல் வெளியேற்ற கோரிக்கைக்கு ஆதரவு தெரி வித்துள்ள இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனிக்கும், பட்டியல் வெளியேற்ற முன்னெடுப்பு பணிகளை செய்து வருகின்ற பரமக்குடி சுரேஷ் உலகமெங்கும் வாழுகின்ற தேவேந்திர குல வேளாளர் சமூக மக்களின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்..

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161